# 2016 - ஆம் ஆண்டிற்க்கான அறிக்கை

## தொன் போஸ்கோ அன்பு இல்லம், சேலம் - 7

தொன் போஸ்கோ அன்பு இல்லத்தின் 28 -வது ஆண்டு விழாவிற்கு வருகை தந்துள்ள உங்கள் அனைவரையும் மனமகிழ்வோடு வரவேற்று அன்பு இல்லத்தின் 2016 ஆம் ஆண்டிற்கான அறிக்கையை உங்கள் முன் சமர்பிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

தொன் போஸ்கோ அன்பு இல்லம் 1988 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சேலம் மாநகரில் சுற்றித்திரிந்த சாலைவாழ் மற்றும் சிதைப்பொருள் சேகரிக்கும் குழந்தைகளின் மறுவாழ்விற்காக ஆரம்பிக்கப்பட்டது. பின்பு குழந்தை தொழிலாளர்கள், பல்வேறு காரணங்களால் வீட்டை விட்டு வெளியேறிய குழந்தைகள், ஆதரவற்ற குழந்தைகள் அன்பும் ஆதரவும் தேவைப்படும் குழந்தைகள் பிச்சையெடுக்கம் குழந்தைகள், சிறையிலிருப்போரின் குழந்தைகள் என்று இலக்கு விரிவாக்கப்பட்டு இன்று சேலம் மாநகரில் தொன் போஸ்கோ அன்பு இல்லம் குழந்தைகளின் உரிமைகளை பாதுகாக்கும் நிறுவனமாக செயல்பட்டு வருகிறது.

## குழந்தை உரிமைகளை பாதுகாக்கும் பணிகள்:-

### குழந்தை உரிமைகள் பாதுகாப்பு மையம்:

குழந்தை உரிமைகள் பாதுகாப்பு மையமானது 1998 ஆம் ஆண்டு சேலம் புதிய பேருந்து நிலையத்தில் சேலம் மாநகராட்சியின் துணையோடு துவங்கப்பட்டது. இம்மையத்தின் மூலமாக சேலம் மாநகரத்திற்கு பல்வேறு இடங்களிலுருந்து வீட்டைவிட்டு ஓடி வரும் குழந்தைகளையும், வழித்தவறிய சிறார்களையும் மீட்டு அவர்களுக்கு மறுவாழ்வு அளித்து வருகிறது. இம்மையம் கடந்த 18 ஆண்டுகளாக 24 மணி நேரமும் செயல்பட்டு வருகிறது. இதுவரை இம்மையத்தின் மூலம் 8886 குழந்தைகள் மீட்கப்பட்டு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது.

### சைல்டு லைன் 1098:

சைல்டு லைன் 1098 என்பது குழந்தைகளுக்கான இலவச அவசர தொலைபேசி சேவை மையமாகும். குழந்தை உரிமை மீறல்களையும், குழந்தைகளின் பிரச்சனைகளையும் வெளிக்கொணரவும்இ அவர்களின் உரிமைகளை பாதுகாக்கவும், அவர்களின் நலனுக்காகவும் மத்திய அரசின் குழந்தைகள் மற்றும் பெண்கள் நல அமைச்சகத்தின் உதவியோடு 24 மணி நேரமும் செயல்பட்டுவருகிறது.

**இதன் மூலம் கடந்த ஆண்டு பயனடைந்தவர்களின் விவரம்:**

| | | |
|---|---|---|
| 1. | மொத்த தொலைபேசி அழைப்புகள் பெற்றது. | - 2,252 |
| 2. | உறைவிடம் வசதி பெற்றவர்கள் | - 237 |
| 3. | வீடு சேர்க்கப்பட்டவர்கள் | - 10 |
| 4. | வன்முறையிலிருந்து மீட்கப்பட்டவர்கள் | - 174 |
| 5. | மனநல ஆலோசனை பெற்றவர்கள் | - 57 |
| 6. | காணாமல் போனவர் பற்றிய பதிவு பெறப்பட்டது | - 09 |
| 7. | வகைப்படுத முடியாத மற்ற உதவிகள் | - 61 |
| 8. | மருத்துவ உதவி பெற்றவர்கள் | - 03 |
| **9.** | **மொத்தம் மீட்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை** | **- 551** |

**குழந்தைகளுக்கான இல்லங்கள்:**

பாதுகாப்பும் பராமரிப்பும் தேவைப்படும் குழந்தைகளுக்காக ஏற்காடு அடிவாரம், சேலம் முள்ளுவாடிகேட், ஆகிய இரண்டு இடங்களில் தொன்போஸ்கோ அன்பு இல்லங்கள் அமைக்கப்பட்டு, குழந்தைகளின் தேவையான உணவு, உடை, உறைவிடம், கல்வி, சிறப்பு பயிற்சிகள், ஆக்கப்பூர்வமான பொழுதுபோக்கு வசதிகள் அளிப்பதன் மூலம் குழந்தைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக பணியாற்றி வருகிறது. இவ்விரண்டு இல்லங்களிலும், கடந்த ஆண்டு தங்கி பயின்ற மாணவர்களின் எண்ணிக்கை 115 ஆகும். இம்மாணவர்கள் புனித பால் மேல்நிலைப்பள்ளி, வினாயகம் பட்டி அரசு நடுநிலைப் பள்ளி, கோட்டை அரசு மேல்நிலைப்பள்ளி SSP பாலிடெக்னிக், போன்ற கல்வி நிறுவனங்களில் பயின்று வருகின்றனர்.

**வரவேற்பு இல்லம் மற்றும் திறந்தவெளி புகலிடம்:**

ஆதரவு மற்றும் பாதுகாப்பு தேவைப்படுகின்ற ஆண் குழந்தைகளுக்கான வரவேற்பு இல்லமும், திறந்தவெளி புகலிடமும், தமிழக அரசின் சமூக பாதுகாப்பு துறையின் உதவியுடன், செயல்பட்டுகொண்டிருக்கிறது. இதன் மூலம் மீட்கப்படுகின்ற குழந்தைகள், குழந்தைகள் நலக்குழுமத்தில் ஒப்படைக்கப்பட்டு அதன் பரிந்துரையின்படி மறுவாழ்வு பெற்று வருகின்றனர்.

**இதன் மூலம் கடந்த 2016 - ஆம் ஆண்டு பயன் பெற்றவர்களள:**

| | | |
|---|---|---|
| 1. | தொடர்பு கொண்ட குழந்தைகளின் எண்ணிக்கை | - 371 |
| 2. | வீடு சேர்த்தவர்களின் எண்ணிக்கை | - 313 |
| 3. | உறைவிடம் பெற்றவர்கள் | - 27 |
| 4. | வேறு குழந்தைகள் நல குழுமத்திற்கு அனுப்பப்பட்டவர்கள் | - 11 |
| 5. | தோழிற்கல்வி பெற்றவர்கள் | - 06 |
| 6. | பள்ளி செல்பவர்கள் | - 09 |

**தற்போது வரவேற்பு இல்லத்தில் இருக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை - 05**

## கல்விப்பணிகள்:

### மாலை நேர வகுப்புகள்:

சேலம், பெத்தநாயக்கன்பாளையம், இராசிபுரம், போன்ற இடங்களில் உள்ள 39 குடிசை மற்றும் கிராம பகுதிகளை கண்டறிந்து அப்பகுதிகளில் வாழ்கின்ற ஏழை, எளிய குழந்தைகளுக்கு தரமான கல்வி வழங்கவும் தொடர்ந்து அவர்கள் பள்ளி செல்வதை கண்காணிக்கவும், உயர் கல்வி பெறுவதற்கான வாய்ப்புகளை உருவாக்கவும் இம்மாலை நேர வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இதன் மூலம் ஏறக்குறைய 1315 மாணவ மாணவிகள் பயன்பெற்று வருகின்றனர்.

### பள்ளி இடை விலகல் விலக்கு மையங்கள்:

கடந்த 2005 ஆம் ஆண்டு முதல் டான் போஸ்கோ அன்பு இல்லத்திலும் சென்ற ஆண்டு முதல் இராசிபுரத்திலும் பள்ளி இடை விலகல் விலக்கு மையங்கள் பள்ளி இடை நின்ற மற்றும் அரசு தேர்வுகளில் தேர்ச்சி பெறாத மாணவ மாணவிகளின் வளர்ச்சிக்காக சிறப்பான முறையில் செயல்படுகிறது. இம்மையங்களில் அரசு பொதுத் தேர்வுகளான 8, 10 மற்றும் 12 ஆம் வகுப்பிற்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டன. இம்மையத்தின் மூலம் இதுவரை 351 மாணவ மாணவிகள் அனைத்து பாடங்களிலும் தேர்ச்சி பெற்று தங்களுடைய மேற்கல்வியை பயின்று வருகின்றனர். இவ்வாண்டு 120 மாணவ மாணவியர் அரசு பொதுத் தேர்வை எதிர்க்கொண்டு 49 மாணவ மாணவிகள் அனைத்து பாடங்களிலும் தேர்ச்சி பெற்று இருக்கிறார்கள். தற்போது அன்பு இல்ல மையத்தில் 46 மாணவ மாணவிகளும் இராசிபுரம் மையத்தில் 61 மாணவ மாணவிகள் பயின்று வருகின்றனர்.

## தொழிற்கல்வி:

### தையற்பயிற்சி

தொன் போஸ்கோ அன்பு இல்லத்தின் சார்பில் சன்னியாசிகுண்டில் உள்ள அசிசி இல்ல அருட்சகோதரிகள் மற்றும் பெத்தநாயக்கன்பாளையத்தில் உள்ள **Anna 4 children** தொண்டு நிறுவனாத்தோடு இனைந்து இளம் பெண்களுக்கு தையற்பயிற்சியும் கைவினை பொருட்கள் தயாரிப்பு பயிற்சியும் அளிக்கப்பட்டது. இப்பயிற்சியில் 106 இளம் பெண்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர். பயிற்சி முடிவில் அவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. அவர்களை அருகில் உள்ள ஆயத்த ஆடைகள் நிறுவனங்களில் பணிக்கு அமர்த்தியதன் மூலம் அவர்களின் பொருளாதார நிலை உயர்த்தப்பட்டுள்ளது. இவர்களில் 21 மாணவிகள் இவ்வாணடு அரசு தேர்வு எழுதியிருகிறார்கள் என்பது குறிப்பிடதக்கது..

## சமுதாயம் சார்ந்த மக்கள் குழுக்கள் ஒருங்கிணைப்பு பணி:

தொன் போஸ்கோ அன்பு இல்லத்தின் பணித்தளங்களான சேலம், பெத்தநாயகன்பாளையம், இராசிபுரம் போன்ற குடிசை மற்றம் கிராம பகுதிகளில் வாழும் மக்களின் சமூக, பொருளாதார மற்றும் கலாச்சார மேம்பாட்டிற்காகவும் அவர்களை மனித மாண்புடன் வாழ வழி செய்யவும் அவர்களை பல்வே வறு குழுக்களாக ஒருங்கிணைத்து அவர்களுக்குத் தேவையான பயிற்சி அளித்து மக்கள் சக்தியை ஒருங்கிணைக்கும் முயற்சியல் ஈடுபட்டு வருகிறது.

**குழந்தைகள் பராளுமன்றங்களும் மற்றும் பசுமை இயக்கங்களும்:**

குழந்தைகளை குழுக்களாக ஒருங்கிணைத்து சமூக பிரச்சினைகளில் அக்கறை உள்ளவர்களாகவும், தங்களின் திறன்களை வளர்த்துக் கொள்ளவும், தங்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் முயற்சியில் ஈடுபடவும், தங்கள் சுற்றுப்புறங்களை தூய்மையாக வைத்துக்கொள்ளவும், சுற்றுச்சூழலை பாதுகாக்கவும், மரங்களை நட்டு பராமரிப்பதன் மூலம் பசுமையான சூழ்நிலைகளை ஏற்படுத்தவும், அமைக்கப்பட்டவையே குழந்தைகள் பாராளுமன்றமும், பசுமை இயக்கங்களும். தற்போது 600 உறுப்பினர்களை கொண்ட 30 குழந்தைகள் பாராளுமன்றங்களும் 260 உறுப்பினர்களை கொண்ட 13 பசுமை இயக்கங்களும் சிறப்பாக செயல்படுகிறது.

**இளையோர் குழுக்கள்:**

தொன் போஸ்கோ அன்பு இல்லத்தின் பணித்தளங்களில் 450 உறுப்பினர்களை கொண்ட 30 இளையோர் குழுக்களையும், 450 உறுப்பினர்களை கொண்ட 30 இளம் பெண்கள் குழுக்களையும் ஒருங்கிணைத்து, சிறப்பு பயிற்சிகள் அளித்து அவர்களின் சமூக பொருளாதார கலாச்சார மேம்பாட்டிற்கு உழைப்பதோடு மட்டுமல்லாமல் அவர்களை ஆளுமை திறன் பெற்றவர்களாகவும் சமூதாயத்தில் மாற்றத்தை கொண்டுவரும் சக்திகளாக உருவாக்குவதில் பெரும் பங்காற்றி வருகிறது.

**சமுதாய வளர்ச்சி குழுக்கள்:**

கிராம மற்றும் குடிசை வாழ் மக்களின் வாழ்க்கைத்தரம் உயரவும், வாழ்வதற்குத் தேவையான பாதுகாப்பான சூழலை ஏற்படுத்தவும், அடிப்படை வசதிகளை உறுதிசெய்யவும், மனித உரிமை ஆர்வலராக செயல்படவும் அவர்களை குழுக்களாக ஒருங்கிணைத்து அவர்களுக்குத் தேவையான பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டது. 450 உறுப்பினர்கள் கொண்ட 30 சமுதாய வளர்ச்சீ குழுக்கள் சிறப்பாக செயல்படுகிறது.

## கோடை முகாமும், சிறப்பு பயிற்சிகளும்:

குழந்தைகளின் திறன் வளர்க்கவும், அவர்களை ஆளுமைத்திறன் கொண்டவர்களாக உருவாக்கவும் அன்பு இல்ல மாணவர்கள், கிச்சிப்பாளையம், பெத்தநா யக்கனபாளையம், இராசிபுரம், போனற பகுதிகளில் உள்ள மாணவ மாணவிகளுக்கு கலை பயிற்சி, கணிணி பயிற்சி, வாழ்வை மேம்படுத்தும் பயிற்சிகள், எளிமையாக ஆங்கிலம் பேசும் பயிற்சி போன்றவைகள் நடத்தப்பட்டன. இவற்றில் 420 மாணவ மாணவிகள் பங்கேற்று பயனடைந்தனர்.

## பணியாளர்களுக்கான சிறப்பு பயிற்சிகள்:

தொன் போஸ்கோ அன்பு இல்லத்தில் பணி செய்யும் அனைத்து பணியாளர்களும் தற்களுடைய பணிகளை சிறப்புடன் நிறைவேற்றவும் தாம் செய்யும் பணிகளில் தனித்துவம் பேறவும் அவர்களுக்கு Skills for Effective Leadership, Skill for Effective Communication, Group dynamics and Team Building, Reporting and Documentation, Time Management and Goal Setting, Orientation on Juvenile Justice Act - 2006, Social Mapping and Social Analysis, Participatory Action Research (PAR) போன்ற தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட்டது. அனைத்து பணியாளரும் பங்கேற்று பயனடைந்தனர்.

## சிறப்பு நிகழ்வுகளும், விழாக்களும்:-

அன்பு இல்லத்திலும் அதன் பணித்தளங்களிலும் உள்ள குழந்தைகள் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்கவும், அவர்களின் குழந்தைப்பருவத்தை முழுமையாக அனுபவிக்கவும் சுதந்திர தினம், குடியரசு தினம், குழந்தைகள் தின விழா, தேசிய திணங்கள், கிறிஸ்து பிறப்பு விழா, பொங்கல் விழா, தொன் போஸ்கோ நாம விழா, YaR Day, ரயில் யாத்திரை, போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளும் விழாக்களும் நடத்தப்பட்டன. இந்நிகழ்ச்சிகளில் குழந்தைகள், இளையோர்கள், பெரியோர்கள், பொதுமக்கள், அனைவரும் கலந்துகொண்டு பயன பெற்றதுமல்லாமல் தங்கள் மகிழ்ச்சியை மற்றவர்களோடு பகிர்ந்து கொண்டனர்.

கடந்த ஆண்டு முழுவதும் எங்களுடைய பணிகளை ஆக்கப்பூர்வமான முறையில் செய்வதற்கு உதவி செய்த அனைத்து நல்ல உள்ளங்களையும், நாங்கள் நன்றியுடன் நினைத்து பார்க்கின்றோம். சிறப்பாக மத்திய அரசின் குழந்தைகள் மற்றும் பெண்கள் நல அமைச்சகம், தமிழக அரசின் சமூக பாதுகாப்புத்துறை, திருச்சி சலேசிய மாநிலம், Schlooz Foundation The Netherlands, Colorful Children Foundation The Netherlands, Anna 4 Children India, Geneva Global USA, Dr. Philominal & Family USA, Mrs. Patty Maurer USA

மற்றும் சலேசியர்கள் அரசு அதிகாரிகள், இளைஞர் நீதி குழும உறுப்பினர்கள், குழந்தைகள் நல குழும உறுப்பினர்கள், தன்னார்வு தொண்டு நிறுவனங்கள், நல விரும்பிகள், உபகாரிகள், தொன் போஸ்கோ உடன் உழைப்பாளர்கள், தொன் போஸ்கோ அன்பு இல்ல முன்னாள் மாணவர்கள், சேலம் மாவட்ட குழந்தைகள் பாராளுமன்ற கூட்டமைப்பு உறுப்பினர்கள், அன்பு இல்ல பணியாளர்கள், காவல் துறை நண்பர்கள், ஊடகத்துறை நண்பர்கள் மற்றும் எங்கள் பணியில் பங்கெடுத்த அனைத்து நல்உள்ளங்களுக்கும் எங்களுடைய இதயம் கனிந்த நன்றியினை உரித்தாக்கிக்கொள்கிறேன்.

இப்படிக்கு

பணி. அமலோற்பவராஜ் ச.ச

இயக்குநர்

தொன் போஸ்கோ அன்பு இல்லம்

சேலம் -07

**நன்றி – வணக்கம்**